# சென்னை, கொடுங்கையூரில் 45 மில்லியன் லிட்டர் நாளொன்றுக்கு கொள்ளளவு கொண்ட மறுசுழற்சி சவ்வூடு பரவுதல் முறையின் மூலம் மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீர் நிலையம் அமைத்தல் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட அந்நீரை மணலி பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு குழாய்கள் பதித்து எடுத்துச் செல்லும் பணி.

## திட்ட செயல் முறை விளக்கம்

### 1. முன்னுரை:

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், சென்னை நகரம் மற்றும் நகரத்தின் எல்லையில் உள்ள பொது மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்காகவும் கழிவுநீர் கட்டமைப்பு அமைப்பதற்காகவும் தனி தன்மை கூடிய பொறுப்புள்ள வாரியமாக அமையப்பட்டுள்ளது. தற்போது சென்னை குடிநீர் வாரியம் கழிவுநீரை மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீராக மறு உபயோகம் செய்து குடிநீர் உபயோகத்தை குறைக்க திட்டமிட்டுள்ளது. அதன் அடிப்படையில், சென்னை குடிநீர் வாரியம் கொடுங்கையூரில் 45 மில்லியன் லிட்டர் நாளொன்றுக்கு கொள்ளளவு கொண்ட மறுசுழற்சி சவ்வூடு பரவுதல் முறையின் மூலம் மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீர் நிலையம் அமைக்க முடிவு செய்துள்ளது. இந்த மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீர் வடசென்னையில் அமைந்துள்ள மணலி–மீஞ்சூர் பாதை மற்றும் மணலி–எண்ணூர் பாதையில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கும், மின்சார நிலையங்களுக்கும் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கும் 28.50 கி.மீட்டர் தொலைவிற்கு குழாய்கள் அமைத்து வழங்கத்திட்டமிட்டுள்ளது. அவ்வாறு அமைக்கப்பட்ட குழாய்களின் அளவுகள் 300 மில்லி மீட்டர் முதல் 800 மில்லி மீட்டர் விட்டம் ஆகும். இத்திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு நகர அபிவிருத்தி மற்றும் கட்டமைப்பு திட்டத்தின் மூலம் செயல்படுத்த

தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மொத்த செலவு ரூ.255கோடி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் வரும் குழாய்கள் சாலையில் ஓரத்தில் பதிக்கப்படும் என்றும் இதனால், தனியாரிடமிருந்து நிலம் இத்திட்டத்திற்காக வாங்கும் நிலை ஏற்படாது என தெரிவிக்கபடுகிறது.

## 2. மறுசுழற்சி சவ்வூடு பரவுதல் முறையால் அமைக்கப்படும் மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்படும் கழிவு நீர் நிலையம் அமைப்பின் விவரம்:—

கொடுங்கையூர் 110 மில்லியன் லிட்டர் நாளென்றுக்கு கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பெறப்படும் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர், உந்து குழாயின் மூலம் சமநிலை தொட்டிக்கு அதன் குணாதிசயங்களை குறைப்பதற்காக அனுப்பப்படும். இத்தொட்டியின் முதன் நிலை சுத்திகரிப்பு என்பது இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரில் உள்ள தங்கும் தன்மையுள்ள மிதக்கும் பொருட்கள் மற்றும் அசுத்தங்களை நீக்குவதாகும். அதன் பின்பு சமநிலை தொட்டியில் பாக்டீரியாக்களின் வளர்ச்சியைத் தடுப்பதற்கும் மற்றும் கரிமங்களை நீக்குவதற்கும் குளோரின் டைஆக்ஸைடு செலுத்தப்படும். சமநிலை தொட்டியில் சுத்திகரிக்கப்பட்ட நீரானது குழாய்களின் மூலம் விரைவு மணல் வடிகட்டும் தொட்டிக்கு அனுப்பப்படும். இந்த தொட்டியில், நீரில் உள்ள மிதக்கும் திடப் பொருட்கள் நீக்கப்படும். இத்தொட்டியின் சுத்தப்படுத்த நீர் குழாய்களின்மூலம் நுண்ணிய சுத்திகரிப்பு முறைக்கு அனுப்பப்பட்டு, அத்தகைய சுத்திகரிக்கப்பட்ட நீர், மறுசுழற்சி சவ்வூடு பரவுதல் சுத்திகரிப்பு முறைக்கு அனுப்பப்பட்டு அங்கு மேலும் நீரானது சுத்திகரிக்கப்படும். அவ்வாறு முழுமையாக சுத்திகரிக்கப்பட்ட மூன்றாம் நிலையான நீரானது சுத்திகரிக்கப்பட்ட நீர் தொட்டியில் சேமிக்கப்படும். இத்தொட்டியில் சேகரிக்கப்பட்ட நீரானது குழாய்களின்மூலம் தொழிற்சாலையின்

உபயோகத்திற்கு அனுப்பப்படும். நுண்ணிய வடிகட்டி மற்றும் மறுசுழற்சி சவ்வூடு பரவுதல் மூலம் வெளியேறும் கழிவுகள் தேவையான அளவு இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீருடன் கலக்கப்பட்டு குழாய்களின் மூலம் பக்கிங்காம் கால்வாய்க்கு அனுப்பப்படும். அவ்வாறு வெளியேற்றப்படும கழிவுகள் மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் குறியீட்டு அளவின்கீழ் இருக்குமாறு தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

## <u>குழாய்களின் விவரம்</u>:—

வடசென்னையில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் மூன்றாம் நிலைசுத்திகரிக்கப்பட்ட நீர் கீழ்காணும் குழாய்களின் அளவுகள் கொண்ட குழாய்கள் மூலம் அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது.

1) 800 மி.மீ விட்டமுள்ள நெகிழ் இரும்பு குழாய்களின் நீளம் 19 கி.மீ
2) 600 மி.மீ விட்டமுள்ள நெகிழ் இரும்பு குழாய்களின் நீளம் 7 கி.மீ
3) 300 மி.மீ விட்டமுள்ள நெகிழ் இரும்பு குழாய்களின் நீளம் 2 கி.மீ

இக்குழாய் பதிப்புகள் பக்கிங்காம் கால்வாய், எண்ணூர் கிரிக் மற்றும் மூன்று இடங்களில் உள்ள ரயில்வே பாதைகளில் கடந்து செல்லுமாறு திட்டமிடப்பட்டுள்ளது.

## <u>சுற்றுப்புற சூழல் ஒழுங்குமுறை ஆணையத்தின் விதிமுறைகள்</u>:—

தேசிய, மாநில மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் ஒழுங்குமுறை சட்டம், விதி மற்றும் கோட்பாடுகளின் கீழ் இந்திய அரசு, மத்திய சுற்று சூழல் மற்றும் வன துறையின் கீழ் கடல் ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதியும், பொதுப்பணித்துறை மற்றும் தென் ரயில்வே ஆகிய துறைகளின் அனுமதியும் இத்திட்டத்தின் கீழ்வரும் குழாய் பதிப்பிற்கு பெற வேண்டியுள்ளது. மேலும் இந்தத்திட்டத்தின் சுற்று சூழல் மற்றும் சமுதாய வளர்ச்சிக்கான வழிமுறைகளையும் மற்றும் தமிழ்நாடு நகர்புற கட்டமைப்பு விதியின் கீழ்வுள்ள சுற்றுபுற

சூழல் மற்றும் சமுதாய கோட்பாடுகள் இத்திட்டத்தைச் செயல் படுத்தும்போது பின்பற்றப்படும் எனவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 3. சுற்றுசூழலின் விவரம்:–

மழை அளவு :–

ஜனவரி 2015 முதல் மே 2015 வரை மழை பெய்த விபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அதேபோல் காற்றின் வேகம், திசை வெப்பநிலை, ஈரப்பதம் ஒரு மணி நேர அடிப்படையில் கணக்கிடப்பட்டன. கோடை மற்றும் குளிர் காலங்களின் ஏற்படும் குறைந்த மற்றும் அதிகப்பட்ச வெப்பநிலை 34°C மற்றும் 25°C நிலையில் இருக்கும் என அளவிடப்பட்டுள்ளது. உயர்ந்தபட்ச ஈரப்பதம் 67–85 சதவிகிதம் இருக்குமெனவும் அளவிடப்பட்டுள்ளது.

காற்றின் தன்மை:–

காற்றில் அமைந்துள்ள குணாதிசங்களான $SO_2$, $NO_x$ மற்றும் நுண்துகள் 2.5 μm மேலேயும் 10 μm க்கு குறைவாகவும் இருக்குமாறு 8 இடங்களில் காற்றின் தன்மையை அறிய கண்காணிக்கப்பட்டுள்ளது. மேலும் காற்றின் அளவு NAAQ குறியீட்டின்கீழ் காற்றின் மாசு அளவு இருக்குமாறு கண்காணிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

நீரின் தன்மை:–

8 இடங்களில் நீரின் தன்மை அளவிடப்பட்டுள்ளது. இரசாயன மற்றும் வேதிய சோதனை அடிப்படையில் இந்நீரின் தன்மை குடிநீர் உபயோகத்திற்கு உகந்தது அல்ல என முடிவு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

## ஒலியின் தன்மை:—

ஒலியின் அளவீடு **50.8** முதல் **54.8** டெசிபல் [A] வரை பகல்நேரங்களில்இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது. அதேபோல் இரவுநேரங்களில் ஒலியின் அளவீடு **41.5 – 43.6** டெசிபல் [A] வரை இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது.

## மண்ணின் தன்மை:—

8 இடங்களில் மண்ணின் தன்மை கண்டு அறியப்பட்டுள்ளது. மண்ணின் தன்மை சோதனையின்கீழ் இம்மண் குறைந்தபட்ச விவசாய தன்மையை கொண்டுள்ளது என அறியப்பட்டுள்ளது.

## சமூக பொருளாதாரம்:–

திட்டம் நடைபெறும் பகுதிகளில் சமூக பொருளாதார மற்றும் சுற்றுபுற சூழ்நிலை ஆகியவற்றின் விவரங்களை சேகரிக்க கணகெடுப்பு நடத்தப்பட்டது. அதன்படி மணலி மற்றும் வடசென்னைப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் பெரும்பாலும் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களாகவும் மற்றும் மீன் தொழிலில் ஈடுபடுபவர்களாகவும் கண்டறியப்பட்டுள்ளன.

## தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் ஆகியவற்றின் வாழ்வியலின் சுற்றுபுற சூழ்நிலைகள்:—

கடல்வாழ் மற்றும் கால்வாய்வாழ் தாவரம் மற்றும் விலங்குகளின் வாழ்வியலின் சுற்றுசூழ்நிலை பற்றிய தகவலுக்கான கணக்கெடுப்பு நடத்தப்பட்டன. அக்கணக்கெடுப்பின்படி அப்பகுதியில் வாழும் கடல்வாழ் மற்றும் கால்வாய்வாழ் தாவரம் மற்றும் விலங்கினங்களுக்கு வாழ்வதற்கான சூழ்நிலைகளுக்கு எந்தவித அச்சுறுத்தலும், மற்றும்எந்தவித அபாயமும் ஏற்படாது என கண்டறியப்பட்டன. ஆதலால், இத்திட்டத்தின்

கடல்வாழ் மற்றும் கால்வாய்வாழ் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் ஆகியவற்றுக்கு மிக பாதகமான சூழ்நிலை இல்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 4. <u>சுற்றுபுற சூழ்நிலை தாக்கத்தின் ஆய்வு</u>:–

திட்டம் செயல்படும் பகுதிகளில் சுற்றுபுற சூழ்நிலைகளின் தாக்கத்தை கண்டறிய மேற்கொண்ட ஆய்வுகளின்படி நிலப்பரப்பு தன்மை, நிலப்பயன்பாடு தன்மை, தரைநீர் மற்றும் நிலநீர் ஆகியவற்றின் தன்மை, காற்றின் தன்மை, ஒலியின் தன்மை, போக்குவரத்தால் ஏற்படும் தன்மை ஆகியவற்றால் ஏற்படும் தாக்கங்களை தடுப்பு நடவடிக்கை செயல்கள் மேற்கொள்வதன்மூலம் சுற்றுபுற சூழ்நிலைகளின் தாக்கம் அதிகம் இருக்காது என கண்டறியப்பட்டுள்ளது. சாலைகளின் ஓரங்களில் குழாய்கள் பதிக்க திட்டமிடப்பட்டுள்ளன. இக்குழாய்கள் பதிக்க 2 1/2 முதல் 3 மீட்டர் வரையான அகலம் தேவை என தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறைந்த அகலமான சாலைகள் அமைந்துள்ள இடங்களில் போக்குவரத்து தடை ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்றும் கண்டறியப்பட்டுள்ளன.

<u>தடுப்பு நடவடிக்கைகள்</u>:–

இத்திட்டத்தில் செயலாக்கத்தின்போது நிலையற்ற இயற்கை சூழ்நிலைகளால் தாக்கம் ஏற்படும் என்றும், இதனால் கட்டுமான பணி முடிக்கும் காலம் சிறிது காலம் பாதிக்கும் என கண்டறியப்பட்டது. இத்திட்டம் செயலாக்கப்படும்போது பணி நடக்கும் இடங்களில் ஏற்படும் இத்தாக்கம் தற்காலிகமானவை மட்டுமே ஆகும். இத்திட்டத்தால், கட்டிமுடிக்கப்படும் நிலையத்தில் இருந்து வெளியேறும் கழிவுகளில் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் தேவையான அளவு கலக்கப்பட்டு அருகிலுள்ள பக்கிங்காம் கால்வாயில் வெளியேற்றப்படும். தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின்

அளவுகோலின் மொத்த திடக்கழிவுகளின் அளவீடு 1700 மில்லி கிராம் / லிட்டர் இருக்கும் அளவிற்கு கலக்கப்பட்ட நீர் வெளியேறுமாறு தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

நீரோட்டம் பாதிக்காதவாறு பக்கிங்காம் கால்வாய் மற்றும் எண்ணூர் கிரிக்கில் குடிநீர் கடத்தும் குழாய் தாங்கும் பாலம் அமைக்கப்படும். குழாய் தாங்கும் பாலத்தில் அமைக்கப்படும் தூண்களுக்கு தேவையான அடித்தளம் அமைக்கப்படும் என்றும் மேலும் தூண்களை அமைப்பதற்கு நீரோட்டம் பாதிக்காதவாறு தேவையான அளவிற்கு காப்பணைகள் கட்டப்படும் என்றும் திட்டமிடப்பட்டுள்ளது. அப்பகுதிகளில் சுற்றுபுற சூழ்நிலை பற்றிய தாக்கத்தின் அளவீடு தொடர்ந்து கண்காணிக்கப்படும் என்றும் அதனை குறைப்பதற்கு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. குழாய் பதிக்கும் கட்டமைப்பு பகுதி–பகுதியாக செயல்படுத்த திட்டமிட்டுள்ளதால் போக்குவரத்து தடை ஏற்படாதவாறும், தொழிலாளர்களின் பாதுகாப்பு கவனத்தில் கொண்டும் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் தீர்மானிக்கப்ட்டுள்ளது. தேவையான போக்குவரத்து மேலாண்மை திட்டம் தயார் செய்து அவற்றை செயல்படுத்த சம்மந்தப்பட்ட துறைகளின் ஆணைகள் பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 5. <u>சுற்றுபுறசூழ்நிலை மேலாண்மை திட்டம்</u>:–

இத்திட்டம், திட்டம், அமைத்தல், இயக்கம் மற்றும் மாற்றம் முறையின்கீழ் செயல்படுத்த உள்ளதால், ஒப்பந்ததாரர் இத்திட்டத்தில் அளிக்கப்பட்டிருக்கும் சுற்றுபுற சூழ்நிலை மேலாண்மை அறிக்கையை கண்டிப்பாக பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும் ஒப்பந்ததாரர் சுற்றுபுற சூழ்நிலை பாதுகாப்பை கவனத்தில் கொண்டு ஒவ்வொரு கட்டமைப்பு பணிகளையும் மேற்கொள்வதற்கு முன்பு சென்னைக் குடிநீர் வாரியத்திடமிருந்து முன் அனுமதி பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்கு

தேவையானதாகக் கருதப்படுகிற பாதுகாப்புத்தேவை, நிலையத்தினை நிறுவி மற்றும் கட்டுமான பணி அமைத்தல், நிலையத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணி, தரக்கட்டுப்பாட்டின் அளவுகோல்கள் மேற்கொள்ளுதல் மற்றும் மின்சார சேமிப்பு ஆகியவற்றை கணக்கில் கொண்டு இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை முடிவு செய்யப்பட்டுளளது. இத்திட்டத்தின் நிர்வாக நடவடிக்கை அமுல்படுத்தும் பணியை சம்மந்தப்பட்ட அதிகாரி தொடர்ந்து கண்காணிப்பு செய்வார் என திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சுற்றுபுற சூழ்நிலை மேலாண்மைத் திட்டம் மேற்கொள்ள ரூ.285.00 லட்சம் செலவிடப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. <u>சமுதாய தாக்கத்தின் அளவீடு</u>:–

திட்டம் கீழ்காணும் பணிவகைகளாக கணக்கில்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

1) கொடுங்கையூரில் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மறுசுழற்சி சவ்வூடு பரவுதல் முறை மூலம் மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீர் நிலையம் கட்டும் பணி.

2) மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீர் நிலையத்திலிருந்து தொழிற்சாலைகளுக்கு எடுத்துச் செல்ல 28.50 கிலோ மீட்டர் துாரத்திற்கு குழாய்கள் பதிக்கும் பணி.

இந்நிலையம் கட்டுதல் மற்றும் குழாய்கள் பதித்தல் ஆகிய பணிகளுக்கு எந்தவித வில்லங்கங்கள் மற்றும் தொந்தரவுகள் ஏதும் இல்லை என கண்டறியப்பட்டுள்ளது. மூன்றாம்நிலை சுத்திகரிப்பு நிலையம் சென்னை குடிநீர் வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் கட்டப்படுவதால், இத்திட்டத்தில் சமுதாய தாக்கம் ஏதுமில்லை என்று தீர்மானிக்கப்பட்டு தமிழ்நாடு நகர்புற நீடித்த கட்டமைப்பு நிறுவன திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சுற்றுப்புறசூழல் மற்றும் சமுதாய கோட்பாடுகளின் விதியின்கீழ்

இத்திட்டம் “S3” (எஸ் 3) என வகையைச் சார்ந்தது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து நிர்வாகம் மேற்கொள்வதற்காக தேவையான ஏற்பாடுகள் இத்திட்டத்தின் பாடம்–5ல் பட்டியலிடப்பட்டுள்ளன.

<u>புகார்கள் நிவாரண அமைப்பு முறை</u>:–

சென்னைக் குடிநீர் வாரியம் இத்திட்டத்தை செயலாக்குவதற்காக திட்ட நிர்வாக ஆலோசகர் குழு அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆலோசகர் குழுவில் சுற்றுப்புற சூழ்நிலை மற்றும் சமுதாய சமூகம் சார்ந்த வல்லுனர்களும் இடம் பெறுவர். இந்த வல்லுனர்கள் இத்திட்டத்தின் தினந்தோறும் நடவடிக்கைகளை கண்காணிப்பர். சென்னைக் குடிநீர் வாரியமும் இத்திட்டத்தின் சுற்றுப்புற சூழ்நிலை மற்றும் சமுதாய தாக்கங்களை நிர்வகிக்க சுற்றுப்புற சூழ்நிலை மற்றும் சமூக சமுதாயத்தைச் சார்ந்த வல்லுனர்களை நியமிக்க முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின் குறைகளைக் களைய புகார்கள் நிவாரண அமைப்பு குழு அமைக்க முடிவு செய்து அக்குழுவின் உறுப்பினர்களாக பின்வருபவர்கள் இருப்பார்கள் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. கண்காணிப்பு பொறியாளர் (சென்னைக் குடிநீர் வாரியத்தால் இத்திட்டத்திற்காக நியமிக்கப்பட்டவர்).
2. மக்களால் தேர்ந்தெடுக்ககப்பட்ட ஏதாவது ஒரு நபர்.
3. அப்பகுதியைச் சார்ந்த பொதுமக்களால் நன்கு அறியப்பட்ட நபர் ஒருவர்.
4. செயற் பொறியாளர் (சென்னைக் குடிநீர் வாரியத்தால் இத்திட்டத்திற்காக நியமிக்கப்பட்டவர்).

புகார்தாரரிடமிருந்து பெறப்படும் புகார்கள் முறைப்படி ஏற்றுக் கொள்ளப்படும். பெறப்படும் புகார்களை 30 நாட்களுக்குள் தீர்ப்பதற்கு சென்னைக் குடிநீர் வாரியம் முயற்சி செய்ய வேண்டும் என அறிவுறுத்த;பபட்டுள்ளது. தீவிரமான பிரச்சனைகளை உடனடியாக

களையவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலே அமைக்கப்பட்ட புகார்கள் நிவாரண அமைப்பு குழுவால் புகார்கள் களைய திருப்திகரமாக செயல்படுத்த முடியவில்லை என்றால், புகார்கள் உயர்மட்ட அதிகாரிக்கு அதாவது சென்னைக் குடிநீர் வாரியத்தால் இத்திட்டத்திற்காக நியமிக்கப்பட்ட முதன்மை பொறியாளரிடம் புகார்களை முறையிட வேண்டும்.

விவாதம் மற்றும் பேச்சுவார்த்தை சம்மந்தமான புகார்கள் அக்குழுவிடம் வந்தால் புகார் சம்மந்தமாக பிரச்சனைகளை அவ்வப்போது பதிவு செய்ய வேண்டும். அந்த புகார் நிவர்த்திக்காக எடுக்கப்பட்ட ஒவ்வொரு வழிவகையும் பதிவு செய்யப்படும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி இந்த பிரச்சனையில் தலையிட்டு புகார்தாரர்க்கும் மற்றும் புகார்கள் நிவாரண அமைப்பு குழுவிற்கும் வழிகாட்டியாக செயல்படுவார். இவர், பிரச்சனையை கண்டுபிடித்த பிறகு புகார்தாரர்க்கும் மற்றும் புகார்கள் நிவாரண அமைப்பு குழுவிற்கும் எடுத்துச் செல்வார். அக்குழு பிரச்சனையைப் பற்றி தீவிரமாக ஆராய்ந்து மற்றும் விவாதித்து பிரச்சனைக்கான முடிவுகளை புகார்தாரரிடம் முறையாகச் சொல்லி பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும்.

சென்னைக் குடிநீர் வாரியம் சுற்றுசூழல் மற்றும் சமுதாய தாக்கத்தினால் ஏற்படும் புகார்கள் பற்றிய அறிக்கைகளை மாதந்தோறும் தமிழ்நாடு நகர்புற கட்டமைப்பு நிறுவனத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

புகார்கள் நிவாரண அமைப்பு குழுவை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

முதன்மை பொறியாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்,
எண்: 1, பம்பிங் ஸ்டேசன் சாலை, சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை – 600 002.
தொ.பே. எண்: 044 – 28451300

புகார்களை பதிவு செய்ய தொடர்பு கொள்ள வேண்டிய
தொ.பே.எண் 044 – 45674567

புகார்களை மின் அஞ்சல் மூலமாக பதிவு செய்ய தொடர்பு கொள்ள வேண்டிய
மின் முகவரி:

http: // www.chennaimetrowater.tn.nic.in//services/complaint.htm

## 7. பொதுமக்களின் கருத்து கேட்பு:–

உலக வங்கியின் தகவல் மற்றும் வெளிப்படைத்தன்மையின் கொள்கையின்படி இத்திட்டத்திற்கான பொதுமக்களின் கருத்துக்கேட்பு அவசியமாகிறது. அதன்படி சென்னைக் குடிநீர் வாரியம் பொதுமக்களின் கருத்து கேட்பு நிகழ்ச்சியை ஏற்ப்பாடு செய்தது. கருத்து கேட்பு நிகழ்ச்சியை பற்றிய தகவல்களை அறிக்கை மூலமாகவும் மற்றும் நேரடி தொடர்பு மூலமாகவும் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. அந்நிகழ்ச்சியில் பொதுமக்களால் கூறப்பட்ட எண்ணங்கள் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்க்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.

## 8. திட்டம் அமுல்படுத்துதல் மற்றும் சென்னைக் குடிநீர் வாரியத்தால் அமைக்கப்பட்ட நிறுவன ஏற்பாடுகள்:–

இத்திட்டத்தில் 45 மில்லியன் லிட்டர் நாளொன்றுக்கு கொள்ளளவு கொண்ட மறுசுழற்சி சவ்வூடு பரவுதல் மூலம் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியும் மற்றும் அந்நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட நீரை வடசென்னை, மணலி பகுதியில் உள்ள பல்வேறு தொழிற்சாலைகளுக்கு எடுத்துச் செல்ல 28.50 கிலோ மீட்டர் நீளத்திற்கு குழாய்கள் பதிக்கும் பணியும் உள்ளடங்கியுள்ளது. தமிழ்நாடு நகர்புற நீடித்த கட்டமைப்பு திட்டத்தின்கீழ் ரூ.255.00 கோடி மதிப்பில் சென்னைக் குடிநீர் வாரியம் மூலம் அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. சுற்றுப்புற சூழ்நிலை பாதுகாப்பு அம்சங்கள் (நிலையம்

கட்டும்போது ஏற்படும்) அடையாளம் காணும் விதமாக சுற்றுப்புற சூழ்நிலை மேலாண்மை திட்டங்கள் இத்திட்டத்தின் ஒப்பந்த பத்திரங்களில் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளன.

<u>திட்ட மேலாண்மை ஆலோசனை குழு</u>:–

திட்டத்தை செயல்படுத்துவதற்காக, சென்னைக் குடிநீர் வாரியம் திட்ட மேலாண்மை ஆலோசனை குழு அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. சுற்றுப்புற சூழ்நிலை மற்றும் சமூக சமுதாயம் பற்றிய வல்லுனர்களும் இக்குழுவில் இடம் பெற்றிருப்பர். (சுற்றுப்புற சூழ்நிலை மற்றும் சமூக சமுதாய அம்சங்களை கணக்கில் கொண்டு அவற்றை உறுதி செய்யவும் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமாகவும்) இக்குழு திட்டம் சம்பந்தமான சுற்றுப்புற சூழ்நிலை மற்றும் சமூக சமுதாய அம்சங்கள் பற்றி இவ்வல்லுனர் குழு மாதந்தோறும் சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## 9. <u>திட்டத்தின் பயன்கள்</u>:–

இத்திட்டத்தின் நோக்கமானது இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மேலும் மூன்றாம் நிலையில் சுத்திகரிக்கப்பட்டு தொழிற்சாலை பயன்களுக்கு உபயோகப்படுத்த திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதனால் தொழிற்சாலைகள் உபயோகித்த குடிநீரின் அளவை குறைத்து அவற்றை நகரத்தில் உள்ள பொதுமக்களின் குடிநீர் தேவைகளுக்கு உபயோகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தால் சுத்திகரிக்கப்பட்ட நீரை வருங்காலத்தில் தொழிற்சாலைகளின் நீர்த் தேவைகளை பூர்த்தி செய்யவும் மற்றும் அவற்றின் வேறு பயன்பாட்டிற்கும் உபயோகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.